இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 147 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 22 – செவ்வாய்க்கிழமை 06 ஜனவரி 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 147 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 22 - Tuesday 06 January 2026 - Chennai 16 Pages ₹ 5.00

## மாணவச் செல்வங்களே! படியுங்கள்! உங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதற்கு ‘திராவிட மாடல்’ அரசு இருக்கிறது!

# மடிக்கணினித் திட்டம், செலவு அல்ல! மாணவர்கள் உலகை ஆள்வதற்கான முதலீடு!

## 10 இலட்சம் மடிக் கணினிகள் வழங்கி – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜன. 6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்து உரையாற்றுகையில், “மாணவச் செல்வங்களே! படியுங்கள்… படியுங்கள்… படியுங்கள்! உங்களைப் பார்த்துக் கொள்வதற்கு நான் இருக்கிறேன்! “உங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதற்கு ‘திராவிட மாடல்’ அரசு இருக்கிறது!. “மடிக்கணினித் திட்டம்” என்பது செலவு அல்ல! மாணவர்கள் உலகை ஆள்வதற்கான முதலீடு! என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**

இம்மகத்தான விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மாணவர்களான உங்களைப் பார்க்கும்போது, எனக்குள்ளே புது ‘vibe’ வந்துவிட்டது. மடிக்கணினி வழங்குகின்ற நிகழ்ச்சிக்கு இந்த நிகழ்ச்சிக்கு எதற்கு “உலகம் உங்கள் கையில்!” என்ற தலைப்பை வழங்கியிருக்கிறோம் தெரியுமா! இது வெறும் தலைப்பு இல்லை; அது தான் உண்மை! எதிர்காலமே உங்கள் கையில் தான் இருக்கிறது! அதை உரக்கச் சொல்லி, உணர்த்துவதற்குத் தான் இத்தனை பேரும் இந்த விழாவிற்கு வந்திருக்கிறீர்கள்!

அப்படிப்பட்ட பெருமைமிகு விழாவில், வரவேற்புரை நல்கியிருக்கக்கூடிய துணை முதலமைச்சர் தம்பி உதயநிதி அவர்களே!

சிறப்புரை ஆற்றியிருக்கக்கூடிய Moon Man - மரியாதைக்குரிய அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களே!

’உயர்கல்வித் துறை அமைச்சர் சகோதரர் கோவி.செழியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களே!

அதேபோல சிறப்பாக உரையாற்றி, இந்த நிகழ்ச்சிக்குப் பெருமை சேர்த்திருக்கக்கூடிய பொருளாதார அறிஞர் அரவிந்த் சுப்பிரமணியன் அவர்களே!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்பு விருந்தினர் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், தொழிலதிபர்கள், ஸ்டார்ட்அப் நிறுவன அதிபர்கள், நடிகர்கள், விளையாட்டுத் துறை, தொழில் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிறப்பாக உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய சகோதரர் நடிகர் கார்த்தி உள்ளிட்ட கலைத்துறை சார்ந்த நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

புத்தாண்டை புத்துணர்வுமிக்க, மாணவ சமுதாயத்துடன் தொடங்குவதே பாசிட்டிவ் எனர்ஜியைத் தருகிறது!

நெக்ஸ்ட் ஜெனரேஷனான உங்களை மனதில் வைத்துதான், இந்த மொத்த விழாவையுமே ஏற்பாடு செய்திருக்கிறோம்! அதனால்தான், கல்விக் கண்காட்சியுடன் இணைத்து, இதை, அறிவு விழாவாக, கல்வி விழாவாக, எதிர்காலத்திற்குத் தேவையான விழாவாக ஏற்பாடு செய்திருக்கிறோம்! இந்த விழாவை சிறப்பாக ஒருங்கிணைத்து, சிறப்பு சேர்த்திருக்கக் கூடிய நம்முடைய அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

ஏன், இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்துகிறோம்? ஏன், இதுபோன்று திட்டங்களைச் செயல்படுத்துகிறோம்? மாணவர்களை வளர்த்தெடுத்தால்தான் மாநிலம் வளரும்! நாடு வளரும்! அதனால் நம்முடைய ஆட்சியில், “நான் முதல்வன்”, “புதுமைப் பெண்”, “தமிழ்ப்புதல்வன்” இப்போது இந்த லேப்டாப் திட்டம்!

இந்த ஸ்டேஜில் நீங்கள் லேப்டாப் பெறுவது போலவே, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆங்காங்கே நம்முடைய அமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

### அறிவியலை உங்கள் கரங்களில் வழங்குவதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சி!

இன்றைக்கு சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி வளர்ந்து, ஒட்டுமொத்த உலகத்தையும் நம்முடைய கைகளுக்கு எட்டும் தொலைவுக்குக் கொண்டு வந்துவிட்டது! அதை உங்கள் கைகளுக்கே கொண்டு வந்து வழங்குவதுதான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சி!

நூறு அல்ல; ஆயிரம் அல்ல; 20 இலட்சம் லேப்டாப்-களை இளைய சமுதாயத்துக்கு வழங்கப் போகிறோம்! அதன் முதல் கட்டமாகத்தான், இன்றைக்கு பத்து இலட்சம் பேருக்கு லேப்டாப் வழங்கத் தொடங்கி இருக்கிறோம்!

திராவிட இயக்கம் என்பது, அறிவியக்கம்! அறிவுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற இயக்கம்! அதனால்தான், அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புகளை, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு உடனடியாக, உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்று நம்முடைய ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

எடுத்துக்காட்டுக்குச் சொல்கிறேன் – 25 ஆண்டுகளுக்கு முன்பே, ‘இனிவரும் காலம் தொழில்நுட்பக் காலம், கம்ப்யூட்டரின் காலம்’ என்று உணர்ந்து ஐ.டி. பாலிசி, ‘டைடல் பார்க்’ என்று கொண்டு வந்தார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்! அதனால் தான், நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், உலகளவில் சாஃப்ட்வேர் ஃபீல்டில் டாப் பொசிஷன்ஸில் இருக்கிறார்கள்!

தமிழர்களான நாம் எப்போதும் கடந்த காலப் பெருமைகளையும் பேசுவோம்! எதிர்காலப் பெருமைகளுக்காகவும் உழைப்போம்! ஒருபோதும், போலிப் பெருமைகளை பேசி தேங்கிட மாட்டோம்! அதற்கு ஒரு உதாரணம்தான் இந்த விழா!

எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், உங்களின் திறனும், பகுத்தறிவும், அறிவியல் பார்வையும் ஊக்குவிக்கப்பட்டால்தான், புது புதுக் கண்டுபிடிப்புகள் நிகழும்! தொழில்நுட்பம் வளரும்!

### மனிதர்களுக்குக் காலம் கொடுத்த இரண்டாவது நெருப்பு, A.I. தொழில்நுட்பம்!

மனித இனம், நெருப்பையும், சக்கரத்தையும் கண்டுபிடித்த காலத்தில், இதுபோதும், இவ்வளவுதான் நமக்கு தெரிந்தது என்று சுணங்கி இருந்தால், இப்போது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

### தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க அறிமுகம் செய்யப்பட்ட

## ஒரே நாளில் அலைபேசி, வலைதளம் வாயிலாக 14,318 கோரிக்கைகள் பரிந்துரை!

### பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு!

**சென்னை, ஜன. 6 -**

**தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்க அறிமுகம் செய்யப்பட்ட அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு வலைவாசல் வழியாக ஒரே நாளில் 14,318 பேர் கோரிக்கைகள், பரிந்துரைகளை வழங்கியுள்ளனர். கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வருகின்ற சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு, துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் 12 பேர் அடங்கிய தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவை அமைத்தார்.**

இக்குழுவினர் பொதுமக்கள், வணிகர், விவசாயிகள், இளைஞர், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் நேரடியாக சந்தித்து பரிந்துரைகளை பெரும் பொருட்டு தமிழ்நாடு முழுக்க பயணம் மேற்கொள்ள உள்ளனர். இதன் ஒரு பகுதியாக பொதுமக்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறும் வகையிலான அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு




வலைவாசல் (போர்டல்) ஆகியவற்றை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

இதற்காக 08069446900 என்ற தொலைபேசி எண்ணில் ஆலோசனை தெரிவிக்கலாம். மேலும் வாட்ஸ்அப் எண் 9384001724, மின்னஞ்சல் dmkmanifesto2026@dmk.in, இணையதளம்http://www.dmk.in/ta/manifesto2026, சமூக வலைத்தளங்கள்: dmkmanifesto26, செயற்கை நுண்ணறிவுத் தளம்: tnmanifesto.ai என்ற தளங்களின் மூலம் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் தி.மு.க.விற்கு வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

2026 தி.மு.க. தேர்தல் அறிக்கைக்காக பொதுமக்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறும் வகையிலான அலைபேசி எண், வலைதள விவரம், சமூக வலைதள தொடர்புகள், செயற்கை நுண்ணறிவு வலைவாசல் அறிமுகம் செய்யப்பட்டதோடு நில்லாமல் மாநிலம் முழுக்கவும் கருத்துகளையும் பரிந்துரைகளையும் வரவேற்று தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அறிமுகம் செய்யப்பட்ட முதல் நாளில் தொலைபேசி வழியாக 1,188, வாட்ஸ் அப் வழியாக 7,527, மின்னஞ்சல் வழியாக 251, சமூக வலைதளங்களான இணையதளம் வழியாக 2015, கியூ ஆர் ஸ்கேன் வழியாக 692, ஏஐ வலைவாசல் வழியாக 2645 பேர் என மொத்தம் 14,318 கோரிக்கைகளும், பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன. தி.மு.க.வின் இந்த புதிய முறை பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

---

### வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக

## ரூ.13.73 கோடி மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்கள் !

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன. 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத் திடலில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணிபுரியும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களை (Mahindra Bolero B4 AC BSVI) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, அரசின் பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

மேலும், மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. எனவே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பணியாற்றும் உயர் அலுவலர்களுக்கு வாகனங்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக திகழ்கிறது.

2025-2026ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில், “வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்களுக்கு 2 புதிய வாகனங்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு 153 புதிய வாகனங்கள் ஆக மொத்தம் 155 புதிய வாகனங்கள் ரூ.16.71 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், வருவாய் நிரு வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக அலுவலர்களுக்கு 2 புதிய வாகனங்கள், சார் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு 153 புதிய வாகனங்கள், என மொத்தம் 13 கோடியே 73 இலட்சத்து ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 155 புதிய வாகனங்களை (Mahindra Bolero B4 AC PS BSVI) முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் மேற்கண்ட உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை வருவாய்த்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 36 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் 370 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு. சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் ச. நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.